Arimaa Nokku

# அரிமா நோக்கு

ISSN 2320-4842

16: 1 ஏப்பிரல் 2022

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

ISSN 2320-4842

அரிமா நோக்கு
16 : 1 ஏப்ரில் 2022

பின்மாலை = வைகறை?
- வ. ஜெயதேவன் 03

புதுமைதாசனின் துப்பறியும் நாடகங்கள் ஐந்து!- ஓர் ஆய்வு
- சீதா லட்சுமி 05

Construction of "Questionnaire to Study the English Language Textbooks (QSELT)"
- D. Bagya 19

பதினெண் கீழ்க்கணக்கில் எண்ணுப்பெயர்கள்
- ந. பெரியசாமி 23

Patriarchal Women and Absent Mothers: A Reading of Anita Nair's Ladies Coupe
- *Anu Bharathi* 30

இடைச்சொல் 'தனம்'
- பா. மதுகேஸ்வரன் 36

ஆசாரக்கோவை கூறும் எண்வகை ஒழுக்கங்கள்
- மு. கவிதாதேவி 38

நூன்மரபா? நூல்மரபா? அரிய புதுச்செய்திகளும் பெயர்க்காரணமும்
- வாணி அறிவாளன் 42

பூவாளூர்ப் புராண யாப்பியல்
- கோ. லோகேஸ்வரி 51

பள்ளு இலக்கியங்களில் கட்டளைப் பாக்கள்
- ஏ. கவிதா 58

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## உக்ரைனில் என்ன நடக்கிறது?

மூன்றாம் உலகப்போர் உக்ரைனில் முகம்காட்டியுள்ளதோ என்னும் கவலை நம் தலைவாசலில் இருண்மை குவித்துள்ளது. உக்ரைன்-உருசியா இடையே பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளது. இன்னும் எவ்வளவு அழிவுகளுக்குப்பின் அல்லது இன்னும் எத்தனை உயிர் இழப்புகளுக்குப்பின் உடன்பாடு எட்டப்படும் என்பது தெரியவில்லை. வல்லரசுகள் விரும்பியதைச் செய்யலாம், யாரும் தடுக்க முடியாது என்னும் நிலைமை தொடர்ந்து இருந்துவருகிறது.

உக்ரைன் நேட்டோ நாடுகள் அவையில் (வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பில்) உறுப்பினராக விரும்பியது. அமெரிக்க வல்லாண்மை அங்கு வலை விரிக்கும் என்று கருதிய உருசியா எதிர்ப்புக் கொடி பிடித்தது. உக்ரைன் உருசிய ஒன்றியத்திலிருந்து 1991ஆம் ஆண்டு பிரிந்தது. ஆனாலும் தன் கட்டுப்பாட்டை அது தளர்த்தவில்லை. உருசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை உண்டாக்கும் என்று அதன் அதிபர் விளாடிமிர் புதின் படைகளை உக்ரைன் பக்கம் கடந்த வாரம் நகர்த்தினார்.

வானைப் பிளந்து மனித இனத்தை வேரோடு வீழ்த்தும் அழிவுக் கருவிகள் உக்ரைன் தலையின்மீதும், முகத்தின்மீதும், நெஞ்சின் மீதும் வந்து விழுகின்றன. காற்று, பூமி, கடல் யாவும் பற்றி எரிகின்றன. போர் அறியா மழலைகளை, இல்லம் தாண்ட முடியா முதியவர்களை, மற்றும் பொதுமக்களை உருசியப்படைகள் கொன்று குவித்துவருகின்றன.

ஐக்கிய நாடுகள் அவையில் உருசியாவுக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது அதை இந்தியா ஆதரிக்கவில்லை. அமைதி காத்தது. அதற்கு என்ன பொருள்? அமெரிக்கா சீற்றம் கொள்ளும் என்பதா? படையெடுப்பு தப்பானது என்று அமெரிக்கா எப்படிச் சொல்லும்? இராக் வேதிமப் போர்க் கருவிகளை வைத்திருப்பதாகப் பொய்யிலே பிறந்த பொய்களைச் சொல்லித்தானே படைகளை அனுப்பியது அமெரிக்கா? பதுங்கு குழியில் ஒளிந்திருந்த சதாம் உசேனைப் பிடித்துவந்து தூக்கிலே போட்டது அமெரிக்கா.

இனி, இக்கடும் போர்ச்சூழலில் கல்வி கற்க உக்ரைன் போன நம் செல்லக் குழந்தைகள் படும் துயரம் ஊடகங்களில் காணுந்தோறும் கண்கலங்குகிறோம். பொழுதெல்லாம் எப்படி மீள்வரோ? என்ன ஆவரோ? என்ற துயரப் பின்னலில் துடித்துக் கிடக்கிறோம். பெரும் பான்மையர் மருத்துவக் கல்விக்காகச் சென்றவர்கள். தாயகத்தில் மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைத்திருந்தால் உக்ரைன் போயிருக்க மாட்டார்கள். இங்கு நீட்டு என்னும் வடிகட்டித்தேர்வு எண்ணற்ற இளையோர் மருத்துவக் கனவுகளை வேட்டையாடி வீழ்த்திவிட்டது. அரசு மருத்துவக்கல்லூரிகள் எண்ணிக்கை குறைவு. தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கோ காணிக்கை செலுத்த முடியவில்லை. பணக்காரர்களே அயல்நாடுகள் சென்று கற்றதொரு காலம். இக்காலம்

ISSN 2320-4842

உள்நாட்டில் பணத்கொதைக்கொட்டிக் குவிக்க முடியாத நடுத்தட்டு மக்களின் மகனோ மகளோதான் எங்கெங்கோ இருக்கும் சின்னஞ்சிறு நாடுகளை நோக்கிச் சிறகு விரிக்கின்றனர். இப்போது உக்ரைனில் பதுங்குகுழிகளில், பாதாளத் தொடர்வண்டி நிலைய உள்பக்கத்தில் ஒடுங்கியும் நடுங்கியும் தவிக்கின்றனர். ஒரு சிறுகரண்டிச் சோற்றை இருவர் பங்கிட்டுக் கொள்கின்றனர். குடிக்கத் தண்ணீர் இல்லை. வெடிச்சத்தம் கேட்கும்போதும் விமான உறுமல் கேட்கும்போதும் அடிவயிறு குலுங்குகிறது. இந்தியத் தூதரகம் எந்த நடவடிக்கையும் விரைந்து எடுப்பதாகத் தெரியவில்லை என்கின்றன ஊடகங்கள். இத்தலைவாசல் முடியும் தறுவாயில் ஒரு செய்தி தாகத்தில் தவித்திருந்த கருநாடகத்து நவீன்- மருத்துவ நான்காம் ஆண்டு மாணவர், ஊரில் உள்ள தந்தையிடம் நம்பிக்கையோடு இருங்கள் அப்பா! வந்துவிடுவேன் என்று கைப்பேசியில் ஒரு மணி நேரத்துக்குமுன் சொல்லி விட்டுத் தண்ணீர் வாங்க வரிசையில் ஒரு கடைமுன் நின்றவர் விண்கிழித்துப் பாய்ந்த வெடிகுண் டுத் தாக்குதலில் இறந்துபோனார்.


*ஆசிரியர்*

**ஈரோடு தமிழன்பன்**

*இணையாசிரியர்*

**வ. ஜெயதேவன்**

*ஆசிரியர் குழு*

**நா. கணேசன் (அமெரிக்கா)**
**நா. சுப்பிரமணியன் (கனடா)**
**பொன். செல்வகணபதி**
**ஒப்பிலா மதிவாணன்**
**சீதா லட்சுமி (சிங்கப்பூர்)**
**மு. பரமசிவம் (மலேசியா)**
**பத்மாவதி விவேகானந்தன்**
**இரா. பிரேமா**
**பா. இரவிக்குமார்**
**மருதூர் அரங்கராசன்**
**பெ. இலக்குமிநாராயணன்**

*அறிவுரைக் குழு*

**இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்**

*பதிப்பாளர்*

**இரா. பன்னிருகைவடிவேலன்**


## கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் உறுப்பினர் | ரூ. 3500/- | US | $ 150 |
| புரவலர் | ரூ. 5000/- | US | $ 200 |
| பெரும்புரவலர் | ரூ. 10,000/- | US | $ 500 |
| மீப்பெரும் புரவலர் | ரூ. 20,000 | US | $ 1000 |
| நிறுவனம்சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 15,000/- | US | $ 700 |

### விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 15,000/- |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 10,000/- |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 3, 000/- |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 1, 500/- |